# FLORAL EMBROIDERY DESIGNS

WITH STITCH CHART AND INSTRUCTIONS

*By*

**" EMILLIE "**

*Published & Distributed by*

The South India Mercantile Corporation

**T. Nagar, Madras-17 & T. Nagar, Thiruchirapalli**

*(Copy Right Strictily Reserved)*

**Book No. 3** **Price R 1-8**

# EMBROIDERY

**Novel features of this book :**

1. Being bound with removable clips permitting removal and replacement of any design, tracing is facilitated.

2. Further, as the designs are so impressed that they show clearly at the back, the design can be traced at the back with a soft pencil and this drawing can be transferred to the cloth by waxing the cloth with a piece of candle, laying the design sheet with the pencil drawing touching the cloth and moving the back of a smooth teaspoon, with a little pressure over the lines of the design.

## Some Do's and Don'ts.

**Some Do's:**

When working a line or stem etc., stitches should be close and of uniform length and in a perfect line, straight or curved – For good work Raised embroidery is the best – For scallops and borders Button – Hole stitches are by far the best. With Raised emdroidery it makes beautiful combination – While trying a big design, try to introduce as many suitable stitches as possible – For quick work Chain stitch is suitable – Couching and Applique work are capable of producing good work. Even the tailor's rags will give you good inexpensive selections for Applique work – Use a needle just bigger than the thread. See that the thread fills up the hole made by the needle. – For floral borders, Richelieu embroidery is the easiest and quickest. – In embroiderying dresses, Net Applique is beautiful as well as quick and easy.

**Some Don'ts:**

When working do not draw the thread too tightly, especially when the cloth is thin, for either the cloth will pucker or the needle hole will be widened. This precaution is specially necessary in Chain Stitch – In Satin and Stem stitches, do not let the cloth show through between the stitches. Lay the stitches close and parallel without overlap – In Raised embroidery, do not let the inner stitches show though anywhere – In Applique work do not let the joint between the two cloth to be visible anywhere – Do not attempt the fine points of a design with a thick thread – Do not forget to iron out the finished work. Lay the embroidery face down on a very smooth polished surface, cover with a moderately wet thin cloth and iron the wrong side with a moderately heated iron. – Do not waste time and money and thread on a worthless design. It pays you best to make a careful choice of a good book of designs, and select therefrom the designs suited to your taste. A GOOD BOOK OF DESIGNS IS THE BEST INVESTMENT FOR THE NEEDLEWORKER.

## Brief Notes on Various Embroidery Stitches

1. **Run Stitch:**—Passes through the cloth up and down at regular intervals in a line
2. **Raised Embroidery:**—Covering stitches of the same colour as the padding are lai[illegible] across so as to completely cover the padding. There should be no padding along the edges so that the covering stitches will assume a natural curve.
3. **Back Stitch:**—Needle goes down at 1, up at 2, again down at 1, up at 3, again down at 2 and so on.
4. **Seed Stitch:**—Two back stitches placed side by side but scattered about.
5. **Cord Stitch:**—A line of Back stitches closely covered over by straight stitches laid across.
6. **Straight Stitch:**—All stitches radiate from the centre-down at 1, up again at centre, down at 2 and so on.
7. **Stem Stitch:**—A row of small simple stitches laid slantingly across the line of the design.
8. **Satin Stitch:**—Simple stitches laid close and parallel to each other generally over and across a padding of stitches of the same colour.
9. **Long and Short Stitch:**—Simple stitches laid long and short alternatingly up at 1, down at 2, up at 3, down at 4 and so on.
10. **Cross Stitch:**—A row of stitches to right are finished from left to right. Then a row of cross stitches are

12. **Chain Stitch:**—The needle comes up at 1, lays a loop of thread on the cloth which is held down by the left thumb, goes down again at 1, comes up at 2 over the loop thread and is tightened. The last loop is fixed to the cloth by a back stitch.

13. **Zig Zag Chain:**—Loops of equal length are laid slantingly up and down.

14. **Broad Chain:**—Up at 1, a loop laid and held down by thumb, down at 2, then without tightening, needle is brought up at 3, then a second loop over the loop thread, down at 4 and so on.

15. **Lazy daisy Stitch:**—Loops are laid in the form of flowers are leaves and tied down at top with back stitches.

16. **French Knot:**—Insert needle into cloth, bring it ont just beyond, wind the thread twice or thrice rather loosely round the needle and holding the twisted thread lightly with the left hand draw the needle and thread lightly with the left hand draw the needle and thread carefully through the twists, tighten knot and insert the needle just behind to fix the knot.

17. **Bullion Stitch:**—The needle is wound round with thread, and drawing the needle through the twists. The spiral may be bent in the form of a petal.

18. **Button-Hole Stitch:**—The needle comes up at 1, a loop made, goes down at 2, comes up again a little to the right of 1 over the loop of thread and is tightened.

19. **Fly Stitch:**—Is an open chain stitch.

20. **Feather Stitch:**—Is a series of Button-Hole stitches worked slantingly from side to side up.

21. **Double Feather Stitch:**—Instead of one stitch this side and one that side, two stitches this side and two the other side are made.

22. **Chevron Stitch:**—First make the horizontal stitch 1, then from the middle of this stitch, make the slanting stitch 2, then bring the needle up a little to left and make the horizontal stitch 3, then bring the needle up where the stitch 2 ended i.e. the middle of stitch 3, make slanting stitch 4.

23. **Couching:**—Brightly coloured thread or Gold thread are laid over the cloth and covering them with various artistic stitches.

24. **Applique:**—In this, shapes cut out of suitably coloured cloth take the place of needle made embroidery. Details may be added by embroidery stitches on the appliqued cloth. Velvet applique is highly pleasing.

25. **Eyelet:**—Made by piercing the cloth with thick needle and widening the hole a bit by drawing the thread, while working a ring of overcast stitches around the eyelet.

26. **Alphabets:**—Are done in generally Satin Stitch. Thin portions may be worked in Stem stitch. Letters may be worked in Cross stitch, Chain stitch or combination stitches.

27. **Broderie Angalais:**—This consists of an artistic arrangements of eyelets big and small, round and long, shaped like flowers and leaves. The edges of eyelets are worked in overcast stitches or Button-hole stitches.

28. **Renaissance Embroidery:**—Is the reserve of Broderie Angalais, in that the figures are retained but the blank portions of the cloth cut away. To support the figures, bars are worked by throwing a thick thread across and covering it Button-hole stitches.

29. **Richelieu Embroidery:**—Is similar to Renaissance emhroidery, only the bars are ornamented with picots. Picot is a small bullion stitch bent round.

30. **Net Applique:**—Similar to 28 and 29, but instead of bars to support the figures, a piece of net is stitched on to the back of cloth and the overcast stitches are made through both the cloth and net and the blank portion of the cloth only is cut away, leaving the net in place supporting the figures.

# EMBROIDERY STITCH CHART


BY

"EMILLIE"


[COPY RIGHT STRICTLY RESERVED]

*


**1. RUN STITCH**




**2. RAISED EMBROIDERY**




**3. BACK STITCH**




**4. SEED STITCH**




**5. CORD STITCH**




**6. STRAIGHT STITCH**




**7. STEM STITCH**




**8. SATIN STITCH**




**9. LONG & SHORT**




**10. CROSS STITCH**



**11. HERRING BONE**




**12. CHAIN STITCH**




**13. ZIG ZAG CHAIN**





**14. BROAD CHAIN**




**15. LAZY DAISY**






**19.** FLY STITCH




**20.** FEATHER STITCH




**21.** D. FEATHER STITCH




**22.** CHEVRON STITCH




**23.** COUCHING




**24.** APPLIQUE




**25.** EYELET STITCH




**26.** ALPHABETS




**27.** BRODERIE




**28.** RENAISSANCE



**29.** RICHELIEU



**30.** NET APPLIQUE



# சித்திரத் தையல்.

## இப்புத்தகத்தின் புதிய அம்சங்கள்.

1. காப்பி செய்ய வேண்டிய டிசைன்களை சுலபமாக எடுக்கவும், மறுபடியும் கோர்த்து வைக்கவும் அனுகூலமாக கிளிப்புகள் போடப்பட்டிருக்கின்றன.

2. மேலும் டிசைனின் கோடுகள் பின்புறம் தெளிவாகத் தெரியும்படி செய்திருப்பதால், பின்புறத்தில் மெதுவான பென்சிலால் டிசைனை எழுதி, துணியை மெழுகு வர்த்தியால் பிசு பிசுவென்றாகும்படி தேய்த்து, பென்சிலால் எழுதியது துணியில் படியும்படி வைத்து, கையால் தடவி சமப்படுத்தி, ஒரு வழவழுப்பான கரண்டியின் பின் புரத்தால் கொஞ்சம் அழுத்தி டிசைன் கோடுகளின்மேல் இழுத்துக்கொண்டு போனால், பென்சிலால் எழுதிய கோடுகள் துணியில் ஒட்டிக்கொள்ளும்.

### முக்கியமாக செய்ய வேண்டியதும், செய்ய வேண்டாததும்.

## செய்ய வேண்டியன.

ஒரு கோடு அல்லது கிளை போடும்பொழுது, தையல்கள் நெருக்கமாகவும், ஒரே நீளமாகவும் இருக்க வேண்டும். முடிந்த தையல் ஒழுங்கான நேர் அல்லது வளைந்த கோடாக தோன்றவேண்டும்—நிசமான உருவம்போல் தையல் போடுவதற்கு, எடுப்பான தையல்தான் சிறந்தது — வளைந்த ஓரங்களுக்கும் (Scallops), நேரான ஓரங்களுக்கும் (Borders), பித்தான் துவாரத் தையலே அதிக அழகாகவும், உறுதியாகவும் இருக்கும். அதிக கஷ்டமுமில்லை. எடுப்பான தையலாக இத் தையல்களைப் போட்டால் இன்னும் அழகாயிருக்கும் — பெரிய டிசைனை போடும்பொழுது பலவித ஏற்ற தையல்களை உபயோகித்தால் ஒரேமாதிரி இல்லாமல் அழகாயிருக்கும்—சீக்கிரம் தையலை முடிப்பதற்கு, சங்கிலி தையல் ஏற்றது—கௌசிங்கினாலும் (Couching) அப்ளிக்வேலை (Applique) யினாலும் பலவித அழகிய படங்கள் போடலாம். சிறிய துண்டு நூல்களையும், துண்டு துணிகளையும் பலவிதமாய் பிரயோஜனப்படுத்தலாம். அப்ளிக் வேலைகளுக்கு தையல்காரர் வெட்டிப்போட்ட துண்டு துணிகளில் பல பிரயோஜனப்படும்—ஊசி நூலைவிட கொஞ்சம் மொத்தமாக இருக்கவேண்டும். ஊசியில் உண்டான துவாரத்தை நூல் சரியாக மூடும்படி இருக்கவேண்டும் — (Borders) ஓரங்களுக்கு, (Richelieu,) ரிச்லியூ தையலே சீக்கிரமாகவும், சுலபமாகவும் முடிக்கத்தக்கது — உடைகளை அலங்கரிப்பதற்கு, வலையின்மேல் போடும் அப்ளிக் தையல் (Net Applique,) சீக்கிரத்திலும், சுலபமாகவும் முடிக்கத்தக்கது.

## செய்ய வேண்டாதவை.

தையல் போடும்பொழுது நூலை அதிகமாய் இழுக்கக்கூடாது. அதுவும் மெல்லிய துணியாயிருந்தால் அதிக ஜாக்கிரதை வேண்டும், ஏனென்றால் துணி சுருங்கிவிடும். அல்லது ஊசியின் துவாரம் பெறுத்துவிடும். இது சங்கிலித் தையல் போடும்பொழுது முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம் — சாடின் தையலும், கிளைத் தையலும் போடும்பொழுது, அடியில் துணி தெரியாதபடி நெருக்கமாகவும், ஒன்றின்மேல் ஒன்று குறுக்கிடாமல் தையல்கள் இணையாகவும் இருக்கவேண்டும் — எடுப்பான தையல் (Raised Embroidery) போடும்பொழுது உள்ளிருக்கும் நூல் தெரியாமல் தையல்களால் மூடவேண்டும் — அப்ளிக் வேலையில் துணிகள் சேருமிடம் கொஞ்சம்கூட தெரியாமல் சேர்க்கும் தையல்களை நெருக்கிப் போடவேண்டும் — டிசைனில் கூர் முனைகள் இருக்குமிடத்தில் மொத்த நூலை உபயோகிக்கக்கூடாது — தையல்கள் முடிந்தவுடன் ஸ்திரி (Ironing) போட மறக்கக்கூடாது. ஒரு மழமழப்பான சம இடத்தில் தையல் கீழ்புறம் இருக்கும்படி துணியை வைத்து, ஒரு மெல்லிய ஈர துணியை அதன்மேல் வைத்து அதிகம் அழுத்தாது ஸ்திரி போடவேண்டும், ஸ்திரி பெட்டி அதிக சூடாக இருக்கக்கூடாது. இப்படிச் செய்வதால் தையலின் அழகு மிகவும் அதிகரிக்கும் — அழகில்லா டிசைனை போட்டு, உங்கள் நேரத்தையும், பணத்தையும், நூலையும் வீணாக்காதீர்கள். நல்ல டிசைன்கள் நிறைந்த புத்தகத்தை தேர்ந்தெடுத்து, உங்களுக்கு ஏற்ற டிசைனை எடுத்துக் கொள்ளவேண்டும். **தையல்வேலைக்கு முதல் பிரதானமானது அழகிய டிசைன்கள் நிறைந்த புத்தகமே.**

### பலவித சித்திரத் தையல்களைப் பற்றிய குறிப்புகள்.

1. **Run Stitch :** கோக்கு தையல். துணியின் மேலும் கீழும் சம தூரங்களில் மாறி மாறி செல்லும். இது பலகீனமான தையல். சாதாரணமாக உள் தையல் (Padding) போட பிரயோசனமாகிறது.

2. **Raised Embroidery :** எடுப்பான தையல். உயர்ந்த வேலைக்கு இன்றியமையாதது. இதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் :—உள் தையல்கள் நெருங்கி சமமாக இருக்கவேண்டும். ஓரங்களில் உள் தையல் போடக் கூடாது. உள் தையலும், மேல் தையலும் ஒரே நிற நூலில்தான் இருக்கவேண்டும். மேல் தையல் கீழ் தையலுக்கு குறுக்கிட்டு நெருங்கி கீழ் தையல் தெரியாதபடி இருக்கவேண்டும். சாதாரணமாக சாடின் தையல் இதற்கு ஏற்றது.

3. **Back Stitch :** கெட்டி தையல். ஊசி 1-ல் கீழும், 2-ல் மேலும், மறுபடியும் 1-ல் கீழும் 3-ல் மேலும், மறுபடியும் 2-ல் கீழும் போகும், இது கெட்டியான தையல். ஆனால் அதிக நூல் சிலவாகும். ஓரங்களில் கோடுகளுக்கு ஏற்றது.

4. **Seed Stitch :** விதை தையல். நீ 6 தையலில் சொல்லிய முடிச்சுகள் வரிசையாக இல்லாமல், அங்கு மிங்கும் சிதறி இருப்பது. புஷ்பத்தின் மத்திக்கு ஏற்றது.

5. **Cord Stitch :** நேர் கயிறு தையல். கெட்டித் தையல்களை வரிசையாக போட்டு, அவற்றை நேராக குறுக்கிடும் தையலால் மூடுவது.

6. **Simple Stitch :** சாதாரண தையல். படத்தில் எல்லாத் தையல்களும் நடுவில் ஆரம்பித்திருக்கின்றன. நடுவில் மேல் வந்து, 1-ல் கீழ், மறுபடியும் மத்தியில் மேல், 2-ல் கீழ் இவ்விதம் போகும். மிகவும் உபயோகமானதும், அதிக சுலபமான தையல். அநேக சித்திரத் தையல்கள், இத்தையலின் மாறுதலாகும்.

7. **Stem Stitch :** கிளை தையல். டிசைனில் கிளையின் கோட்டை கொஞ்சம் சாய்ந்து குறுக்கிடும்படி மிகச் சிறிய ஒரே நீளமான சாதாரண தையல்களை நெருக்கிப் போட்டு ஒரு கிளைபோல் செய்வது.

8. **Satin Stitch :** சாடின் தையல். இது சாதாரண தையல்களை, உள் தையல்கள்மேல் நெருக்கி இணைத்து உள் தையல்கள் தெரியாதபடி போடுவது. அதிக அழகும், மிக பிரயோசனமுள்ள தையல்.

9. **Flat Stitch :** தட்டையான தையல். உள் தையலில்லாமல், நேராக துணியின்மேலே சாடின் தையலைப் போடுவது.

10. **Long & Short Stitch :** நீளமும் குட்டையுமான தையல். படத்தில் 1-ன்மேல் வந்து 2-ல் கீழும் 3-ல் மேலும்: 4-ல் கீழும் இவ்விதமாக போகும்.

11. **Cross Stitch :** குறுக்கு தையல். 1-ல் மேலும், 4-ல் கீழும், 3-ல் மேலும், 6-ல் கீழும் இவ்விதம் வலது புறம் சாய்ந்த தையல்களை முடித்து பின்பு குறுக்கு தையல்களைப் போடவேண்டும். தையல் திரும்பும் இடத்தில் 10-ல் கீழ் சென்ற ஊசி 9-ல் மேல் வந்து 8-ல் கீழ் சென்று 7-ல் மேல் வருவதை கவனிக்கவும். தையல்கள் ஒரே நீளமாகவும் ஒரே வரிசை தையல்கள் இணையாகவும் இருக்கவேண்டும்.

12. **Herring Bone Stitch :** ஹெரிங்மீன் எலும்பு தையல். குறுக்குத் தையலில் கொஞ்சம் மாறுதல்பட்டது. 1-ல் மேலும், 2-ல் கீழும், 3-ல் மேலும், 4-ல் கீழும் 5-ல் மேலும், 6-ல் கீழும் ஊசி செல்லும்.

14. Open chain of Broad chain : அகன்ற சங்கிலி. ஊசியை 1-ல் மேல் கொண்டுவந்து நூலை ஒரு வளையமாக வைத்து, அந்நூலை இடது பெருவிரலால் அழுத்திக்கொண்டு, 2-ல் கீழ் செலுத்தி, 3-ல் மேல் கொண்டு வந்து, முதல் வளைய நூலுக்குமேல் அடுத்த வளைய நூலை வைத்து, இரண்டாவது வளையத்தை விரலால் அழுத்திக் கொண்டு 4-ல் கீழ் செலுத்தி, பிறகு விரலை எடுக்காமலே முதல் வளைய நூலை இழுத்து கெட்டிப்படுத்தவேண்டும்.

15. Lazy Daisy or flower Stitch : டெய்சி பூ தையல். சங்கிலித் தையலின் வளையங்களை பூவின் இதழ்கள் மாதிரி வட்டமாக அடுக்கி, வளையங்களின் நுனியில் கெட்டித் தையல்போட்டு பூ மாதிரி செய்வது. ஊசி மத்தியில் 1-ல் மேல் வந்து, நூலை வளையமாக வைத்து, மறுபடியும் 1-ல் கீழ் சென்று 2-ல் வளைய நூலுக்கு மேல் வந்து 3-ல் உள்சென்று இவ்விதம் முதல் இதழ் முடிந்து ஊசி 1-ல் மறுபடியும் மேல் வந்து, முன்சொன்ன மாதிரி இரண்டாவது இதழ்போட்டு இவ்விதம் எல்லா இதழ்களையும் முடிக்கும். சிறு இலைகளை ஒரு வளையத்தால் போடலாம். அதிவேகமாகவும், சுலபமாகவும், அழகாகவும் முடிக்கக்கூடிய இத்தையல் எல்லோரும் பிரியப்படத்தக்கது.

16. French knot : பிரஞ்சு முடிச்சு தையல். முடிச்சு போடவேண்டிய இடத்தில் துணிக்குமேல் ஊசியைக் கொண்டுவந்து, நூலை ஊசியைச் சுற்றிலும் இரண்டு மூன்று தடவை மேலாக சுற்றி இடது கை விரல்களால் மேலாகப் பிடித்துக்கொண்டு ஊசியை சுற்றுகளின் இடையே ஜாக்கிரதையாக இழுத்தால் முடிச்சு விழும், பின்பு ஊசியை முடிச்சின் கிட்டவே துணிக்குள் செலுத்தி முடிச்சை கெட்டிப்படுத்தவும். நூலை சுற்றுகளின் நடுவில் இழுக்கும்பொழுது அவசரமாய் இழுத்தால் நூல் சிக்கிக்கொள்ளும்.

17. Bullion Stitch : கதிர் தையல். இது பிரஞ்சு முடிச்சு தையல்போல்தான். ஆனால் நூல் ஊசியை பலதரம் சுற்றி பாதி ஊசியை மூடிவிடும். அதிஜாக்கிரதையாக நூல் சுற்றுக்களை விரல்களால் பிடித்துக்கொண்டு, ஊசியை மெல்ல இழுக்கவேண்டும். இதை கதிர்போல் நீளமாக துணிமேல் வைக்கலாம். அல்லது வளைத்து இலை அல்லது பூவின் இதழ்போல் செய்யலாம். பிறகு ஊசியை துணியுள் செலுத்தி தையலை கெட்டிப்படுத்தவும்.

18. Button hole Stitch : பித்தான் துவார தையல். 1-ல் ஊசி மேல் வந்து நூலை துணிமேல் சிறு வளையமாக வைத்து, 2-ல் கீழ் சென்று மறுபடியும் 1-க்கு கொஞ்சம் வலது பக்கத்தில் மேல் வந்து இழுத்தால் நூல்கள் பின்னிக்கொண்டு தையல் விழும். இது அழகும் கெட்டியுமான மிகப் பிரயோசனப்படக்கூடிய தையல்.

19. Fly Stitch : ஈ தையல். இது ஒரு பிளந்த சங்கிலி தையல். ஊசியை 1-ல் மேல் கொண்டுவந்து நூலை பாதி வளையமாக துணிமேல் வைத்து இடது கைவிரலால் நூலை அழுத்திக்கொண்டு, 2-ல் உள் செலுத்தி, 3-ல் வளைய நூலுக்குமேல் கொண்டுவந்து, நூலை இறுக்கி 4-ல் உள் செலுத்தவேண்டும்.

20. Feather Stitch : பவளக்கொடி தையல். இது பி. து. தையல்களை நீட்டமாகவும், கொஞ்சம் சாய்ந்தும் இப்புறமும், அப்புறமும், மாறி மாறி போடுவது. ஊசியை 1-ல் மேல் கொண்டுவந்து, நூலை துணிமேல் பாதி வளையமாக வைத்து, 2-ல் கீழ் செலுத்தி, 3-ல் வளைந்த நூலுக்குமேல் கொண்டுவந்து, மறுபடியும் நூலை பாதி வளையமாக வைத்து, 4-ல் உள் செலுத்தி, 5-ல் வளைய நூலுக்குமேல் கொண்டுவரவேண்டும். ஓரங்களுக்கு (Borders) ஏற்றது. செங்குத்தாய் போட்டால் அதிக அழகாயிருக்கும்.

21. Double Feather Stitch : இரட்டை பவளக்கொடி தையல். இரட்டை இரட்டையாக மேற்கூறிய தையலை மாறி மாறிப் போடுவது.

22. Chevron Stitch : செவ்ரான் தையல். முதலில் கிடை நிலைத் தையல் 1-ஐ போட்டுஇதன் மத்தியிலிருந்து சாய்ந்த தையல் 2-ஐ போட்டு, ஊசியை கொஞ்சம் இடது பக்கம் தள்ளி மேல் கொண்டுவந்து, கிடைநிலைத் தையல் 3-ஐ போட்டு, ஊசியை மறுபடியும் 2-வது தையல் முடிந்த இடத்திலேயே மேல் கொண்டுவந்து (அதாவது 3-தையலின் மத்தி) சாய்ந்த தையல் 4-ஐ போடவும். இதில் கவனிக்க வேண்டியது, கிடைநிலைத் தையல்கள் எல்லாம் ஒரே நீளமாகவும் அம்மாதிரியே சாய்ந்த தையல்கள் அனைத்தும் சம நீளமாகவும் இருக்கவேண்டும். சாய்ந்த தையல்கள் எப்பொழுதும் கிடைநிலைத் தையல்களின் சரி மத்தியில்தான் ஆரம்பிக்கவும் முடியவும் வேண்டும்.

23. Couching : கௌசிங். மொத்த அழகிய வர்ண நூல் அல்லது மொத்த ஜரிகையை துணிமேல் வைத்து, நேர்விரோத வர்ண நூல்களால் பலவித அழகிய மாதிரிகளில் குறுக்குத் தையல்களால் துணியுடன் சேர்த்து கட்டிவிடுவது. இது சுலபமான அழகிய தையல்.

24. Applique : அப்ளிக் வேலை. நூலில் உருவங்கள் தைப்பதற்குப் பதிலாக, அழகிய வர்ணத் துணி துண்டுகளை, உருவங்கள்மாதிரி கத்திரித்து, துணிமேல் வைத்து, ஓரங்களை துணியுடன் சேர்த்து தைக்கவும். பெரிய உருவங்களைத்தான் இவ்விதம் செய்யலாம். இலையின் நரம்புகள், முதலியனவற்றை நூலால் அப்ளிக் துணியின்மேல் தைக்கலாம். வெல்வட் துணியில் வெட்டிய உருவங்கள் மிக அழகாயிருக்கும்.

25. Eyelet : சிறு கண். மொத்த ஊசியால் துணியை குத்தி துவாரம் செய்து அத்துவாரத்தை சுற்றி வளையமாக கயிறு அல்லது பி. து. தையல் போடும்பொழுது, துவாரத்திற்குள் நூலை செலுத்தி இழுத்து, துவாரத்தை கொஞ்சம் பெரிதாக செய்யவும்.

26. Alphabets : எழுத்துக்கள். இதற்கு சாதாரணமாக சாடின் தையல் ஏற்றது. மெலிந்த இடங்களுக்கு கிளைத்தையலும், சித்திர எழுத்துக்களுக்கு குறுக்குத் தையல், சங்கிலித் தையல் முதலியன போடலாம்.


27. Broderie Anglais : ஆங்கில சித்திரத் தையல். கண்கள்போன்ற துவாரங்களை (Eyelets) இலைகள், பூக்கள் மாதிரி அடுக்கியும், அல்லது ஸ்காலப்புகளாக வளைந்தமாதிரி அடுக்கியும், பி. து. தையல் அல்லது கயிறு தையலால் அக்கண்களின் ஓரங்களை தைப்பது.


28. Renaissance Embroidery : ரினைசான்ஸ் தையல். இதில் இலை, பூ, கொடி முதலிய உருவங்களை துணியில் வரைந்துகொண்டு உருவங்களின் ஓரங்களை பி. து. தையலால் கெட்டிப் படுத்தி, இவ்வுருவங்களைத் தாங்குவதற்காக மொத்த நூலை அங்குமிங்கும் குறுக்கிட்டுப் போட்டு இந்த நூற்களின்மேல் பி. து. தையல்களை நெருக்கிப் போட்டு அலங்கரித்து, பின்பு துணியில் டிசைனுக்கு வெளியே இருக்கும் காலியிடத்தை, இந்த குறுக்கிடும் நூல்களுக்கு அடியிலிருந்து கத்திரித்து எடுத்துவிடவேண்டும். இது சுலபமான தையல், நூல் சிலவு குறைச்சல். அழகாயுமிருக்கும். ஆதலால் பலபேர் பிரியப்படக்கூடியது.



29. Richelieu Embroidery : ரிச்லியூ தையல். மேற்கூறிய தையல்போல்தான். ஆனால் குறுக்கிடும் நூல்களில் "பிகாட்கள்" (Picots) இருக்கும், "பிகாட்" என்றால் கதிர் தையலால் ஒரு சிறு கதிர்போட்டு அதை சிறு வளையமாக வளைத்துவிடுவது. மேற்கூறிய காரணங்களால் இதுவும் அநேகருக்குப் பிரியப்பட்ட தையல்.



30. Net Applique : வலைமேல் அப்ளிக் வேலை. உடைகளுக்கு மிகவும் அழகானது. துணியில் டிசைனை எழுதி, அடிபாகத்தில் கொசுவலை துண்டை வைத்து, டிசைனின் ஓரங்களை மாத்திரம் பி. து. தையலால் துணியையும் வலையையும் சேர்த்து தைத்து, பின்பு துணியின் காலி இடங்களை வலையை விட்டுவிட்டு துணியை மாத்திரம் கத்திரித்து எடுத்தால், டிசைனை வலை தாங்கிக்கொண்டு நிற்கும்.



SWEET
DREAMS












N





































A B C D E F G H I J K
L M N O P
Q R S T U V W X Y Z























2. PADDING.




3. RAISED EMBROIDERY.



4. BACK STITCH.




5. POINT-de-SABLE.




6. SIMPLE KNOT STITCH.



7. SEED STITCH.




8. STRAIGHT OVERCAST or CORD STITCH.



9. SLANTING OVERCAST or CORD STITCH.




10. SIMPLE STITCH or STRAIGHT STITCH.





11. STROKE STITCH.







13. SATIN STITCH.




14. FLAT STITCH.




15. LONG & SHORT STITCH.




16. CROSS STITCH.




17. HERRING BONE STITCH.





18. DOUBLE COLOUR HERRING BONE STITCH.




Note: Stitches in contrasting colour.




passing under and over the





20. ZIG ZAG CHAIN.




21. OPEN CHAIN or BROAD CHAIN STITCH.





22. LAZY BAISY STITCH.





23. TWISTED KNOT.




24. FRENCH KNOT.



25. BULLION STITCH.




26. BUTTON HOLE STITCH.





27. BLANKET STITCH.






26. BUTTON HOLE STITCH.




27. BLANKET STITCH.




28. SCALLOP STITCH.



29. TONGUE STITCH.



30. TWO COLOUR B.H.S. STITCH.



31. DOVETAILED B.H.S.



32. TRIANGULAR B.H.S.



33. FLOWER B.H.S.




34. EYELET B.HS.



35. SCALLOP BORDER IN B.H.S.




37. Detached SCALLOP BORDER IN B.H.S.




38. SAW TOOTH SCALLOP BORDER IN B.H.S.




39. FLY STITCH.





40. FEATHER OR CORAL STITCH.




41. DOUBLE FEATHER STITCH.




42. ELONGATED DOUBLE FEATHER STITCH.



43. CHEVRON STITCH.




44. Double CHEVRON Stitch.



45. INTERWOVEN BACK STITCH.




46. INTERWOVEN CHAIN STITCH.



47. DOUBLE INTERWOVEN BACK STITCH.




49. COUCHING.




50. APPLIQUE.




51. SMALL EYELET.




52. BIG EYELET.




53. LONG EYELET.




54. SHADED EYELET.




55. EYELET ROWS.




56. SCALLOP.



57. ALPHABETS.



58. BRODERIE ANGLAIS.



59. RENAISSANCE
60. RICHLIEU,



## இப்புத்தகத்தின் புதிய அப் ௱ங்கள்.

1. காப்பி செய்ய வே டிய டிசைன்களை சுலபமாக எடுக்கவும், மறுபடியும் கோர்த்து வைக்கவும் அனுகூலமாக கிளிப்பு ா போடப்பட்டிருக்கின்றன.

2. மேலும் டிசைனில் கோடுகள் பின்புறம் தெளிவாகத் தெரியும்படி செய்திருப்பதால், பின்புறத்தில் மெதுவான பென்சிலால் டிசைனை எழுதி, துணியை மெழுகு வர்த்தியால் பிசு பிசுவென்ருகும்படி தேய்த்து, பென்சிலால் எழுதியது துணியில் படியும்படி வைத்து, கையால் தடவி சமப்படுத்தி, ஒரு வழவழப்பான கரண்டியின் பின்புறத்தால் கொஞ்சம் அழுத்தி டிசைன் கோடுகளின் மேல் இழுத்துக்கொண்டு போனால், பென்சிலால் எழுதிய கோடுகள் துணியில் ஒட்டிக்கொள்ளும்.

## முக்கியமாக செய்ய வேண்டியதும், செய்ய வேண்டாததும்.

### செய்ய வேண்டியன.

1. ஒரு கோடு அல்லது கிளை போடும்பொழுது, தையல்கள் நெருக்கமாகவும், ஒரே நீளமாகவும் இருக்கவேண்டும். முடிந்த தையல் ஒழுங்கான நேர் அல்லது வளைந்த கோடாக தோன்றவேண்டும்.

2. நிசமான உருவம்போல் தையல் போடுவதற்கு, எடுப்பான தையல்தான் சிறந்தது. நூல் செலவும் சிரமமும் கொஞ்சம் அதிகப்பட்டாலும் தையல் மிக அழகாயிருக்கும்.

3. வளைந்த ஓரங்களுக்கும் (Scallops), நேரான ஓரங்களுக்கும் (Borders), பித்தான் துவாரத் தையலே அதிக அழகாகவும், உறுதியாகவும் இருக்கும். அதிக கஷ்டமுமில்லை. எடுப்பான தையலாக இத் தையல்களைப் போட்டால் இன்னும் அழகாயிருக்கும்.

4. பெரிய டிசைனை போடும்பொழுது பலவித ஏற்ற தையல்களை உபயோகித்தால் ஒரேமாதிரி இல்லாமல் அழகாயிருக்கும்.

5. சீக்கிரம் தையலை முடிப்பதற்கு, சங்கிலி தையல் ஏற்றது. ஆனால் கொஞ்சம் பழக்கம் வேண்டும்.

6. கௌசிங்கினாலும் (Couching) அப்ளிக்வேலை (Applique) யினாலும் பலவித அழகிய படங்கள் போடலாம். ஆனால் எக்காரணத்தினாலோ ஜனங்கள் அதிகமாய் இவைகளை கையாடுவதில்லை. இவை சுலபமானதும், சீக்கிரத்தில் முடியக்கூடியதுமானவை. கொஞ்சம் யோஜனையுடன் செய்தால் சிறிய துண்டு நூல்களையும், துண்டு துணிகளையும் பலவிதமாய் பிரயோஜனப்படுத்தலாம். அப்ளிக் வேலைகளுக்கு தையல்காரர் வெட்டிப் போட்ட துண்டு துணிகளில் பல பிரயோசனப்படும்.

7. ஊசி நூலைவிட கொஞ்சம் மொத்தமாக இருக்கவேண்டும். ஊசியில் உண்டான துவாரத்தை நூல் சரியாக மூடும்படி இருக்கவேண்டும்.

8. ஊசியினால் வர்ணசித்திரம் வரைந்தால் (Needle painting) இயற்கையில் உள்ள உருவம்போலவே அமையும். வேலை அதிகரித்தாலும், தையலின் அழகு ஒப்பற்றதாகும்.

9. (Borders) ஓரங்களுக்கு, (Richelieu,) ரிச்லியூ தையலே சீக்கிரமாகவும், சுலபமாகவும் முடிக்கத்தக்கது.

10. உடைகளை அலங்கரிப்பதற்கு, வலையின்மேல் போடும் அப்ளிக் தையல் (Net Applique,) சீக்கிரத்திலும், சுலபமாகவும் முடிக்கத்தக்கது.

### செய்ய வேண்டாதவை.

1. தையல் போடும்பொழுது நூலை அதிகமாய் இழுக்கக்கூடாது. அதுவும் மெல்லிய துணியாயிருந்தால் அதிக ஜாக்கிரதை வேண்டும். ஏனென்றால் துணி சுருங்கிவிடும். அல்லது ஊசியின் துவாரம் பெருத்துவிடும். இது சங்கிலித் தையல் போடும்பொழுது முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம்.

2. சாடின் தையலும், கிளைத் தையலும் போடும்பொழுது, அடியில் துணி தெரியாதபடி நெருக்கமாகவும், ஒன்றின்மேல் ஒன்று குறுக்கிடாமல் தையல்கள் இணையாகவும் இருக்க வேண்டும்.

3. எடுப்பான தையல் (Raised Embroidery) போடும்பொழுது உள்ளிருக்கும் நூல் தெரியாமல் தையல்களால் மூடவேண்டும்.

4. அப்ளிக் வேலையில் துணிகள் சேருமிடம் கொஞ்சம்கூட தெரியாமல் சேர்க்கும் தையல்களை நெருக்கிப் போடவேண்டும்.

5. டிசைனில் கூர் முனைகள் இருக்குமிடத்தில் மொத்த நூலை உபயோகிக்கக்கூடாது.

6. தையல்கள் முடிந்தவுடன் ஸ்திரி (Ironing) போட மறக்கக்கூடாது. ஒரு மழமழப்பான சம இடத்தில் தையல் கீழ்புறம் இருக்கும்படி துணியை வைத்து, ஒரு மெல்லிய ஈர துணியை அதன்மேல் வைத்து அதிகம் அழுத்தாது ஸ்திரி போடவேண்டும். ஸ்திரி பெட்டி அதிக சூடாக இருக்கக்கூடாது. இப்படிச் செய்வதால் தையலின் அழகு மிகவும் அதிகரிக்கும்.

7. அழகில்லா டிசைனை போட்டு, உங்கள் நேரத்தையும், பணத்தையும், நூலையும் வீணாக்காதீர்கள். நல்ல டிசைன்கள் நிறைந்த புத்தகத்தை தேர்ந்தெடுத்து, உங்களுக்கு ஏற்ற டிசைனை எடுத்துக்கொள்ளவேண்டும். தையல் வேலைக்கு முதல் பிரதானமானது அழகிய டிசைன்கள் நிறைந்த புத்தகமே.

## பலவித சித்திரத் தையல்களைப் பற்றிய குறிப்புகள்

1. **Run Stitch:** கோக்கு தையல். துணியின் மேலும் கீழும் சம தூரங்களில் மாறி செல்லும். இது பலஹீனமான தையல். சாதாரணமாக உள் தையல் (Padding) ( பிரயோசனமாகிறது.

3. **Raised Embroidery :** எழுப்பின தையல். ...

இதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் :—உள் தையல்கள் நெருங்கி சமமாக இருக்கவேண்டும். ஓரங்களில் உள் தையல் போடக்கூடாது. உள் தையலும், மேல் தையலும் ஒரே நிற நூலில்தான் இருக்கவேண்டும். மேல்தையல் கீழ் தையலுக்கு குறுக்கிட்டு நெருங்கி கீழ் தையல் தெரியாதபடி இருக்கவேண்டும். சாதாரணமாக சாடின் தையல் இதற்கு ஏற்றது.

4. **Back Stitch :** கெட்டி தையல். ஊசி 1-ல் கீழும், 2-ல் மேலும், மறுபடியும் 1-ல் கீழும், 3-ல் மேலும், மறுபடியும் 2-ல் கீழும் போகும், இது கெட்டியான தையல். ஆனால் அதிக நூல் செலவாகும். ஓரங்களில் கோடுகளுக்கு ஏற்றது.

5. **Point-de-Sable :** புள்ளித் தையல். இது புள்ளிகளால் அமைந்த கோடுபோல் தோன்றும். இது கெட்டித் தையலை இடைவெளிகள் விட்டுப் போடுவது. புள்ளிகள் நெருங்கி, சமதூரங்களில் இருக்கவேண்டும். 1-ல் கீழும், 2-ல் மேலும் மறுபடியும் 1-ல் கீழும் 3-ல் மேலும், 4-ல் கீழும் போகும்.

6. **Simple Knot Stitch :** சாதாரண முடிச்சு தையல். இரண்டு கெட்டித் தையல்களை நெருக்கி, ஜோடி ஜோடியாக வரிசையில் சமதூரங்களில் போடுவது.

7. **Seed Stitch :** விதை தையல். நீ 6-தையலில் சொல்லிய முடிச்சுகள் வரிசையாக இல்லாமல், அங்குமிங்கும் சிதறி இருப்பது. புஷ்பத்தின் மத்திக்கு ஏற்றது.

8. **Straight Overcast or Cord Stitch :** நேர் கயிறு தையல். கெட்டித் தையல்களை வரிசையாக போட்டு, அவற்றை நேராக குறுக்கிடும் தையலால் மூடுவது.

9. **Slanting Overcast or Cord Stitch :** சாய்ந்த கயிறு தையல். மேற்கூறிய தையலை நேராக போடாமல், வலது அல்லது இடதுபுறம் சாய்ந்தாற்போல் போடுவது.

10. **Simple Stitch :** சாதாரண தையல். படத்தில் எல்லாத் தையல்களும் நடுவில் ஆரம்பித்திருக்கின்றன. நடுவில் மேல் வந்து, 1-ல் கீழ், மறுபடியும் மத்தியில் மேல், 2-ல் கீழ் இவ்விதம் போகும். மிகவும் உபயோகமானதும், அதிக சுலபமான தையல். அநேக சித்திரத் தையல்கள், இத்தையலின் மாறுதலாகும்.

11. **Stroke Stitch :** கீறல் தையல். சாதாரண தையல்களை நீட்டிப் போடுவது. பேனாவில் செய்த கீறல்கள்போல் தோன்றும்.

12. **Stem Stitch :** கிளை தையல். டிசைனில் கிளையின் கோட்டை கொஞ்சம் சாய்ந்து குறுக்கிடும்படி மிகச் சிறிய ஒரே நீளமான சாதாரண தையல்களை நெருக்கிப் போட்டு ஒரு கிளை போல் செய்வது.

13. **Satin Stitch :** சாடின் தையல். இது சாதாரண தையல்களை, உள் தையல்கள் மேல் நெருக்கி இணைத்து உள் தையல்கள் தெரியாதபடி போடுவது. அதிக அழகும், மிக பிரயோசனமுள்ள தையல்.

14. **Flat Stitch :** தட்டையான தையல். உள் தையலில்லாமல், நேராக துணியின் மேலே சாடின் தையலைப் போடுவது.

15 **Long & Short Stitch :** நீளமும் குட்டையுமான தையல். படத்தில் 1-ல் மேல் வந்து 2-ல் கீழும் 3-ல் மேலும் 4-ல் கீழும் இவ்விதமாக போகும்.

16. **Cross Stitch :** குறுக்கு தையல். 1-ல் மேலும், 4-ல் கீழும், 3-ல் மேலும், 6-ல் கீழும் இவ்விதம் வலதுபுறம் சாய்ந்த தையல்களை முடித்து பின்பு குறுக்கு தையல்களைப் போடவேண்டும். தையல் திரும்பும் இடத்தில் 10-ல் கீழ் சென்ற ஊசி 9-ல் மேல் வந்து 8-ல் கீழ் சென்று 7-ல் மேல் வருவதை கவனிக்கவும். தையல்கள் ஒரே நீளமாகவும், ஒரே வரிசை தையல்கள் இணையாகவும் இருக்கவேண்டும்.

17. **Herring Bone Stitch :** ஹெரிங்மீன் எலும்பு தையல். குறுக்குத் தையலில் கொஞ்சம் மாறுதல்பட்டது. 1-ல் மேலும், 2-ல் கீழும், 3-ல் மேலும், 4-ல் கீழும், 5-ல் மேலும் 6-ல் கீழும் ஊசி செல்லும்.

18. **Double colour Herring Bone :** இரண்டு வர்ண ஹெரிங் மீன் எலும்பு. முதலில் ஒரு வர்ண நூலால் கொஞ்சம் தள்ளித் தள்ளி தையல்கள் போட்டு முடித்து, பின்பு நேர் விரோதமான வர்ண நூலால் இடைவெளிகளில் இன்னொரு தையல் வரிசை போட்டு முடிப்பது. இவ்வேறு வர்ண நூல் முதல் வரிசை தையல்களின் கீழும், மேலும் செல்லும்.

19. **Chain Stitch :** சங்கிலி தையல். ஊசியை 1-ன் மேல் கொண்டுவந்து நூலை ஒரு வளையமாக துணிமேல் வைத்து, அவ்வளையத்தை இடது பெருவிரலால் அழுத்திக்கொண்டு, மறுபடியும் 1-ன் கீழே செலுத்தி 2-ன் மேல் கொண்டு வரும்பொழுது வளைய நூலுக்குமேல் கொண்டுவந்து ஊசியை இழுத்தால் ஒரு வளையம் உண்டாகும். இவ்விதம் மற்ற வளையங்களைப் போட்டு கடைசி வளையத்தை நுனியில் ஒரு கெட்டித் தையல் போட்டு நகராமல் செய்யவும்.

20. **Zig zag chain :** மேலும் கீழும் வளைந்த சங்கிலி தையல். படத்திலிருக்கிற மாதிரி, வளையங்கள் ஒரே நீளமாகவும், இணையாகவும் வளைந்து இருக்கவேண்டும்.

21. **Open chain of Broad chain :** அகன்ற சங்கிலி. ஊசியை 1-ல் மேல் கொண்டு, வந்து நூலை ஒரு வளையமாக வைத்து, அந்நூலை இடது பெருவிரலால் அழுத்திக்கொண்டு, 2-ல் கீழ் செலுத்தி, 3-ல் மேல் கொண்டு வந்து, முதல் வளைய நூலுக்குமேல் அடுத்த வளைய நூலை வைத்து, இரண்டாவது வளையத்தை விரலால் அழுத்திக்கொண்டு 4-ல் கீழ் செலுத்தி, பிறகு விரலை எடுக்காமலே முதல் வளைய நூலை இழுத்து கெட்டிப்படுத்தவேண்டும்.

22. **Lazy Daisy or flower Stitch :** டேய்சி பூ தையல். சங்கிலித் தையலின் வளையங்களை பூவின் இதழ்கள் மாதிரி வட்டமாக அடுக்கி, வளையங்களின் நுனியில் கெட்டித் தையல்போட்டு பூ மாதிரி செய்வது. ஊசி மத்தியில். 1-ல் மேல் வந்து, நூலை வளையமாக வைத்து, மறுபடியும் 1-ல் கீழ் சென்று 2-ல் வளைய நூலுக்கு மேல் வந்து 3-ல் உள்சென்று இவ்விதம் முதல் இதழ் முடிந்து ஊசி 1-ல் மறுபடியும் மேல் வந்து, முன்சொன்ன மாதிரி இரண்டாவது இதழ்போட்டு இவ்விதம் எல்லா இதழ்களையும் முடிக்கும். சிறு இலைகளை ஒரு வளையத்தால் போடலாம். அதிவேகமாகவும் ...

துணிக்குமேல் ஊசியைக் கொண்டுவந்து, நூலை ஊசியைச் சுற்றிலும் இரண்டு மூன்று தடவை மேலாக சுற்றி இடது கை விரல்களால் மேலாகப் பிடித்துக்கொண்டு ஊசியை சுற்றுகளின் இடையே ஜாக்கிரதையாக இழுத்தால் முடிச்சு விழும், பின்பு ஊசியை முடிச்சின் கிட்டவே துணிக்குள் செலுத்தி முடிச்சை கெட்டிப்படுத்தவும். நூலை சுற்றுகளின் நடுவில் இழுக்கும்பொழுது அவசரமாய் இழுத்தால் நூல் சிக்கிக்கொள்ளும்.

25. **Bullion Stitch** : கதிர் தையல். இது பிரஞ்சு முடிச்சு தையல்போல்தான். ஆனால் நூல் ஊசியை பலதரம் சுற்றி பிறகு ஊசியை மூடிவிடும். அதை ஜாக்கிரதையாக நூல் சுற்றுகளை விரல்களால் பிடித்துக்கொண்டு, ஊசியை மெல்ல இழுக்கவேண்டும். இதை கதிர்போல் நீளமாக துணிமேல் வைக்கலாம். அல்லது வளைத்து இலை அல்லது பூவின் இதழ்போல் செய்யலாம். பிறகு ஊசியை துணியுள் செலுத்தி நூலை கெட்டிப்படுத்தவும்.

26. **Button hole Stitch** : பித்தான் துவார தையல். 1-ல் ஊசி மேல் வந்து நூலை துணிமேல் சிறு வளையமாக வைத்து 2-ல் கீழ் சென்று மறுபடியும் 1-க்கு கொஞ்சம் வலது பக்கத்தில் மேல் வந்து இழுத்தால் நூலை பின்னிக்கொண்டு தையல் விழும். இது அழகும், கெட்டியுமான மிகப் பிரயோசனப்படக்கூடிய தையல்.

*N. B.* அடியில் பி. து. தையல் என்பது பித்தான் துவார தையலைக் குறிக்கும்.

27. **Blanket Stitch** : கம்பளி தையல். இது பி. து. தையலை கம்பளி, போர்வை முதலியவைகளின் ஓரங்களுக்கு படத்தில் கூறிய மாதிரிகளில் தள்ளித் தள்ளி நீளமாகவும் குட்டையாகவும் படத்தில் காண்பித்திருக்கும்படி போடுவது.

28. **Scallop Stitch** : ஸ்காலப் தையல். பி. து. தையல்களை பாதி வளைய வடிவமாய், சமதூரங்களில், உள்புறம் ஒழுங்காக ஒரு மத்தியை நோக்கும்படி போடுவது.

29. **Tongue Stitch** : நாக்கு தையல். பி. து. தையல்களை நாக்கின் வடிவம்போல் நீளத்தை அதிகரித்தும் குறைத்தும் போடுவது.

30. **Two colour B. H. Stitch** : இருவர்ண பி. து. தையல். 3-அல்லது 4-தையல்களைச் சேர்த்து ஒரு வர்ணத்தில் போட்டு, அடுத்து நேர்விரோத வர்ண நூலால் இதே மாதிரி தையல்கள் போட்டு, இவ்விதம் மாறி மாறி போட்டால் ஓரங்களுக்கும், குழந்தைகளின் உடுப்புகளுக்கும் போடுவது.

31. **Dovetailed B. H. Stitch** : ஒன்றுக்குள் ஒன்று செல்லும் பி. து. தையல். கொஞ்சம் தள்ளித் தள்ளி தையல்கள் போட்டு ஒரு வரிசை முடித்து, அதே வர்ணம் அல்லது வேறு வர்ண நூலில், எதிர்புறம் ஒரு வரிசை தையலை, முன் போட்ட தையல்களுக்குள் நுழையும்படி போடுவது.

32. **Triangular B. H. Stitch** : முக்கோண பி. து. தையல். மூன்று தையல்கள் சம தூரங்களில் கீழ்பக்கம் ஆரம்பித்து மேல்புறத்தில் ஒரே இடத்தில் சந்திக்கும். இவ்வித முக்கோணங்களை ஒரே அளவில் சம தூரங்களில் வரிசையாக போட்டால் அழகாயிருக்கும்.

33. **Flower B. H. Stitch** : பூ பி. து தையல், நீண்ட தையல்களை வட்டமாக சம தூரங்களில் ஆரம்பித்து, உள்புறம் மத்தியில் சந்திக்குமாறு செய்வது.

34. **Eyelet B. H. Stitch** : கண்ணுள்ள பூ தையல். மேல் தையல்போல்தான். ஆனால் மத்தியிலுள்ள துவாரத்தில் தையல்கள் முடிகின்றன.

35. **Scallop Border In B. H. Stitch** : பி. து. தையலால் ஸ்காலப். படத்தைப்பார்க்கவும்.

36. **Another Scallop Border in B. H. Stitch** : பி. து. தையலால் இன்னொரு படத்தைப் பார்க்கவும்.

7. **Detached Scallop Border in B. H. Stitch** : பி. து. தையலால் தள்ளி இருக்கும் படத்தைப் பார்க்கவும்.

**Saw tooth Border in B. H. Stitch** : பி. து. தையலால் ரம்பப்பல் ஸ்காலப். [illegible]க்கவும்.

**Fly Stitch** : ஈ தையல். இது ஒரு பிளந்த சங்கிலி தையல். ஊசியை 1-ல் மேல் நூலை பாதி வளையமாக துணிமேல் வைத்து இடது கைவிரலால் நூலை அமுத்திக் [illegible]ள் செலுத்தி, 3-ல் வளைய ந[illegible] நூலுக்குமேல் கொண்டுவந்து, நூலை இறுக்கி 4-ல் உள் [illegible]

[illegible]ather or Coral Stitch : பவளக்கோடி தையல். இது பி. து. தையல்களை [illegible] அப்புறமும், மாறி மாறி போடுவது. ஊசியை [illegible] நூலை துணி[illegible] பாதி வளையமாக வைத்து, 2-ல் கீழ் செலுத்தி, 3-ல் [illegible] கொண்டுவந்து [illegible]யும் நூலை பாதி வளையமாக வைத்து, 4-ல் உள் [illegible] மேல் [illegible] ரவேண்டும். ஓரங்களுக்கு (Borders) ஏற்றது. [illegible] அழகாக [illegible]

[illegible]ble Feather [illegible] : இரட்டை பவளக்கோடி தையல். இரட்டை இரட்டை [illegible] போடுவது.

[illegible]er Stitch : நீண்ட இரட்டை பவளக்கோடி. மேற்கூறிய

[illegible] சேவ்ரான் தையல். முதலில் கிடை நிலைத் தையல் 1-ஐ போட்டுஇதன் [illegible] 2-ஐ போட்டு, ஊசியை கொஞ்சம் இடதுபக்கம் தள்ளி மேல் [illegible] தையல் 3-ஐ போட்டு, ஊசியை மறுபடியும் 2-வது தையல் முடிந்த [illegible]ந்து (அதாவது 3-தையலின் மத்தி) சாய்ந்த தையல் 4-ஐ போட [illegible]து. கிடைநிலைத் தையல்கள் எல்லாம் ஒரே நீளமாகவும் அம்மா [illegible]த்தும் சம நீளமாகவும் இருக்கவேண்டும். சாய்ந்த தையல்கள் எப் [illegible]களின் சரி மத்தியில்தான் ஆரம்பிக்கவும் முடியவும் வேண்டும்.

[illegible]n Stitch : இரட்டை சேவ்ரான் தையல். அழகிய ஓரங்கள் போட

...கும். கொஞ்சம் மொத்தமான ஜரிகை நூலை உபயோகித்தால்

...ck Stitch: பின்னிய கெட்டி தையல். முதல் தையலின் கீழ் ... தையல்களுக்கு நடுவில் கீழ்புறம் இழுத்து, இரண்டாவது தையல் ...கொண்டு போனால் இரட்டை வர்ணக் கயிறுபோல் உண்டாகும்.

...ain Stitch: பின்னிய சங்கிலி தையல். மேற்கூறிய மாதிரியே.

... Back Stitch: இரட்டைப்பின்னல் கெட்டி தையல். இதில் ...த்திலிருக்குமாறு, கெட்டித் தையல்களுக்குள் மாறிமாறி

...one: பின்னிய ஹெரிங்மீன் எலும்பு. வேறுவர்ண நூலை ... மேலும், சாய்ந்த தையல்களுக்குள்ளும் மாறிமாறி

...ching: ... அழகிய வர்ண நூல் அல்லது மொத்த ஜரிகையை ...ால் பலவித அழகிய மாதிரிகளில் குறுக்குத் தையல் சேர்த்து ... சுலபமான அழகிய தையல்.

...lique: அப்ளிக் ... உருவங்கள் தைப்பதற்குப் பதிலாக, அழகிய ...டுகளை, உருவங்களை ...ரித்து, துணிமேல் வைத்து, ஓரங்களை துணியுடன் ... உருவ... இவ்விதம் செய்யலாம். இலையின் நரம்புகள், ...ல்லால் அப்ளிக் துணி... மேல் தைக்கலாம். வெல்வட் துணியில் வெட்டிய அழகாயிருக்கும்.

...mall Eyelet: சிறு கண். ...த்த ஊசியால் துணியை குத்தி துவாரம்செய்து, சுற்றி வளையமாக கயிறு ...த்து பி. து. தையல் போடும்பொழுது, துவாரத்திற் ...த்தி இழுத்து இழுத்து, துவாரத்தை கொஞ்சம் பெரிதாக செய்யவும்.

Big Eyelet: பெரிய கண். ...துணியில் சிலுவைபோல் வெட்டி, அதை சுற்றி வளைய அல்லது பி. து. தையல்கள் போடும்பொழுது, நூலை வெட்டுக்குள் செலுத்தி, வெட்டும் துணியை ஓரத்திற்கு இழுத்து இழுத்து, துவாரத்தை ஒழுங்கான வட்டமாக்கவும்.

53. **Long Eyelet:** நீண்ட கண். மேற்கூறிய மாதிரியே. ஆனால் வெட்டு கொஞ்சம் இருக்க வேண்டும்.

54. **Shaded Eyelet:** நிழல் சாயைத கண். இதில் மேல்பக்கம் கயிறு தையலும், கீழ்பக்கம் பி. து. தையலும் போடவேண்டும். அப் பி. து. தையலின் அடியின் மத்தியபாகம் பருத்தும் இருபக்கம் வரவர சிறுத்தும் இருக்கும்படி தையல் போடவேண்டும்.

55. **Eylet Rows:** கண் வரிசைகள். கண்போன்ற துவாரங்களை ஒன்றை ஒட்டி ஒன்று வரிசையாக போடுவதற்கு, தையல் முதல் கண்ணின் மேல்புறம் ஆரம்பித்து, அடுத்த கண் கீழ்புறத்தை முடித்து, இவ்விதம் மேலும் கீழுமாக வளைந்து வளைந்து செல்லும். வரிசையின் கடைசி போனதும், தையல் திரும்பி கீழும் மேலும் வளைந்து சென்று வரிசையைப் பூர்த்தி செய்யும்.

56. **Scallops:** ஸ்காலப்புகள் படத்தில் காண்பித்திருப்பதுபோல் பலவிதமுண்டு. துணியில் ஸ்காலப்பை வரைந்து, அடித்தையல் (Padding) போட்டு, அத்தையல்களை குறுக்கிட்டு பி. து. தையல்களை நெருக்கிப் போட்டு, தையலை ஒட்டி துணியை ஜாக்கிரதையாக கத்திரித்து எடுக்கவேண்டும்.

57. **Alphabets:** எழுத்துக்கள். இதற்கு சாதாரணமாக சாடின் தையல் ஏற்றது. மெலிந்த இடங்களுக்கு கிளைத்தையலும், சித்திர எழுத்துக்களுக்கு குறுக்குத் தையல், சங்கிலித் தையல் முதலியன போடலாம்.


58. **Broderie Anglais:** ஆங்கில சித்திரத் தையல். கண்கள்போன்ற துவாரங்களை (Eyelets) இலைகள், பூக்கள் மாதிரி அடுக்கியும், அல்லது ஸ்காலப்புகளாக வளைந்தமாதிரி அடுக்கியும், பி. து. தையல் அல்லது கயிறு தையலால் அக்கண்களின் ஓரங்களை தைப்பது.

59. **Renaissance Embroidery:** ரினைசான்ஸ் தையல். இதில் இலை, பூ, கொடி முதலிய உருவங்களை துணியில் வரைந்துகொண்டு, உருவங்களின் ஓரங்களை பி. து. தையலால் கெட்டிப்படுத்தி, இவ்வுருவங்களைத் தாங்குவதற்காக மொத்த நூலை அங்குமிங்கும் குறுக்கிட்டுப் போட்டு இந்த நூற்களின்மேல் பி. து. தையல்களை நெருக்கிப் போட்டு அலங்கரித்து, பின்பு துணியில் டிசைனுக்கு வெளியே இருக்கும் காலியிடத்தை இந்த குறுக்கிடும் நூல்களுக்கு அடியிலிருந்து கத்திரித்து எடுத்துவிடவேண்டும். இது சுலபமான தையல். நூல் செலவு குறைச்சல். அழகாயுமிருக்கும். ஆதலால் பலபேர் பிரியப்படக்கூடியது.

60. **Richelieu Embroidery:** ரிச்லியூ தையல். மேற்கூறிய தையல்போல்தான். ஆனால் குறுக்கிடும் நூல்களில் "பிகாட்கள்" (Picots) இருக்கும். "பிகாட்" என்றால் கதிர் தையலால் ஒரு சிறு கதிர்போட்டு அதை சிறு வளையமாக வளைத்துவிடுவது. மேற்கூறிய காரணங்களால் இதுவும் அநேகருக்குப் பிரியப்பட்ட தையல்.

61. **Net Applique:** வலைமேல் அப்ளிக் வேலை. உடைகளுக்கு மிகவும் அழகானது. துணியில் டிசைனை எழுதி, அடிபக்கத்தில் கொசுவலை துண்டை வைத்து, டிசைனின் ஓரங்களை மாத்திரம் பி. து. தையலால் துணியையும், வலையையும் சேர்த்து தைத்து, பின்பு துணியின் காலி இடங்களை வலையை விட்டுவிட்டு துணியை மாத்திரம் கத்திரித்து எடுத்தால், டிசைனை வலை தாங்கிக்கொண்டு நிற்கும்.

62. **Needle Painting:** ஊசியால் வரையும் சித்திரம். இயற்கையில் பூ இலை முதலியன வற்றில் வர்ணம் கொஞ்சம் கொஞ்சமாக மாறுகிறது. இவ்விதம் தையலில் செய்வதற்கு உதாரணமாக ஒரு இலையின் அடிபாகத்தில் கறுத்த பச்சையும், அதற்குமேல் கொஞ்சம் கறுத்த பச்சையும், நுனியில் வெளிர் பச்சையும் போடவேண்டும். மேலும் இவ்வர்ணங்கள் இயற்கைபோல்


R
RS
M
S



